**செய்தி வெளியீடு எண்: 555** **நாள்: 18.08.2018**

## நெடுஞ்சாலைத்துறை

### ***திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் வட்டம் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கேயுள்ள பழுதடைந்த இரும்பு பாலத்தைப் பற்றிய அறிக்கை***

திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கம் அருகில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே சென்னை-திருச்சி - திண்டுக்கல் சாலை கி.மீ 312/2-313/0ல் ஓர் இரும்புப் பாலம் 1928 ல் கட்டப்பட்டது. இப்பாலமானது நிர்ணயிக்கப்பட்ட ஆயுட் காலத்தை நிறைவு செய்யதுள்ளது. இப்பழமையான பாலத்தின் வயதினை கருத்தில் கொண்டு 2012ம் ஆண்டிலேயே புதிய பாலம் கட்ட திட்டமிடப்பட்டது,

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பழுதடைந்த கொள்ளிடம் ஆற்று இரும்புப் பாலத்திற்குப் பதிலாக புதிய பாலம் கட்டப்படுமென்று 2012 ஆம் ஆண்டு அறிவித்தார். அதன்படி, புதிய பாலம் கட்ட ரூ.77.72 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு பழைய பாலத்திலிருந்து 10.00 மீட்டர் தூரம் தள்ளி மேற்குப் பக்கத்தில் புதிய பாலம் கட்டப்பட்டு 14.02.2016 அன்று போக்குவரத்து பயன்பாட்டிற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. புதிய பாலம் கட்டப்பட்ட பின்பு பழைய இரும்பு பாலம் கைவிடப்பட்டு அனைத்து வித போக்குவரத்தும் 2016 ஆம் ஆண்டில் தடை செய்யப்பட்டது.

பழைய இரும்பு பாலமானது 33 மீ நீளமுடைய 24 கண்களை கொண்டுள்ளது. 15.08.2018 அன்று மாலை 4.30 மணியளவில் கொள்ளிடம் ஆற்றில் 45,000 கன அடி தண்ணீர் சென்று கொண்டிருந்தது. அன்று மாலை 6.30 மணியளவில் பழைய பாலத்தின் 18 வது தூணின் கிழக்கு பக்கத்தில் ஒரு சிறிய விரிசல் ஏற்பட்டிருப்பதை நெடுஞ்சாலைத்துறையின் ரோந்துக்குழு கண்டறிந்தது.

16.08.2018 அன்று காலை 8.00 மணியளவில் இந்த விரிசல் 10 செ.மீ அகலத்திற்கு இருந்தது. அதே நாள் காலை 11.00 மணியளவில் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர், மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சியர் ஆகியோர் இப்பாலத்தை பார்வையிட்டார்கள். அச்சமயம் கொள்ளிடம் ஆற்றில் 76,000 கன அடி தண்ணீர் சென்று கொண்டிருந்தது. பாலத்தில் விரிசல் 60 செமீ அளவுக்கு விரிவடைந்திருந்தது. பாலத்தின் 18 வது தூண் 1.00 மீட்டர் அளவிற்கு கீழே இறங்கி விட்டது. 18 வது தூணில் உள்ள இரண்டு காங்கிரீட் ஸ்லாப்களும் தூணோடு சேர்ந்து கீழே இறங்கியுள்ளது. பழைய பாலத்தின் அஸ்திவாரமானது வெல் பவுன்டேஷன் (well Foundation) என்கிற முறையில் கட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு தூணுக்கும் மூன்று Well உள்ளது. தூண்கள் செங்கல் மற்றும் சுண்ணாம்புக் காரையால் கட்டப்பட்டுள்ளது.

2012 ஆண்டிலிருந்து அரசால் மேற்சொன்ன முன்னெச்சரிக்கை மற்றும் துரித நடவடிக்கையால் பழைய வலுவிழந்த பாலத்திற்குப் பதிலாக புதிய பாலம் கட்டி முடிக்கப்பட்டு போக்குவரத்து பாதிக்காமல் உள்ளது.

தலைமைப்பொறியாளர்(நெ) க்காக
க(ம)ப, சென்னை -25.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**